ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஆத்மதத்வ விவேசனம்

## ஸ்ரீ உ.வே.மஹாவித்வான் காஞ்சி ஸ்வாமி

## ராமாநுசன் 21

## தமிழாக்கம்

## ஆத்மதத்துவத்தின் ஒன்றுக்கொன்று வேறுபட்ட தருமம்

## டாக்டர் மாடபூசி வரதராஜன்

### ஆத்மாவின் ஞானத்தைப் பற்றியிருக்கும் தன்மை

"ஞானமே ஆத்மா" என்றும் "ஞானத்துக்கு இருப்பிடம் ஆத்மா" என்றும் உபநிஷத்து முதலான பிரமாணங்களினால் அறிகின்றோம். ஞானமே ஆத்மா என்பதைப்பற்றி பிறகு பேசுவோம். ஞானத்துக்கு இருப்பிடம் ஆத்மா என்பதைப்பற்றி இப்போது ஆராய்ச்சி செய்வோம். ஆத்மா ஞானத்துக்கு இருப்பிடமாயிருக்கும். தீபமும் அதன் ஒளியுமாகிய இரண்டும் ஒளி திரவியமாயிருக்கச்செய்தேயும் தீபமானது ஒளிக்கு இருப்பதுபோல, ஆத்மாதானும் ஞான ஸ்வரூபனானாலும் தன்னுடைய தரும்மான ஞானத்துக்குத் தன்னை ஒழியத் தனிப்பட்டிருத்தலாவது, தனிப்பட்டுத் தோன்றுதலாவது இல்லாதபடி தான் ஆதாரமாயிருத்தலே ஞானத்துக்கு இருப்பிடமாம் தன்மையாகும். "விஜ்ஞாதாரமரே கேந விஜாநீயாத் ஜாயாத்யேவாயம் புருஷ:" (ஓய்! லர்வஜ்ஞனான ஈச்வரனை கீழ்ச்சொன்ன உபாயத்தை விட்டு வேறு எந்த உபாத்தாலே அறியக்கூடும்? இந்த புருஷனே - ஆத்மாவே அறிகிறான் - ப்ர.உப.6.5.16) என்பது முதலான பிரமாணங்களினால் ஆத்மா ஞானத்துக்கு இருப்பிடம் என்பது திண்ணமாக அறியப்படும்.

### ஆத்மா ஞானமாத்ரமே அல்லன்

பௌத்தர் முதலான சில பிற மத்த்தவர்கள் இப்படி ஆத்மா ஞானத்துக்கு இருப்பிடமானவன் என்பதை இசையாதே ஞான மாத்ரம் என்று சொல்லுவதுண்டு. அது தவறு. ஆத்மாவுக்கு ஞானத்துக்கு இருப்பிடமாம் தன்மை அன்றிக்கே கேவலம் ஞானமாயிருக்குமதுவே உள்ளதாகில், "நான் இத்தை அறிந்தேன்" என்று உலகத்தில் நிர்விவாதமாக்க் காண்கிற வழக்கு தகுதியற்றதாக வேண்டிவரும். "நான் அறிவு" என்று தன்னை ஞான மாத்ரமாகவன்றோ சொல்லிக்கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட வழக்கு ஒரு

நபரிடமும் காண்பதில்லை. “இவ்வர்த்தத்தை நான் அறிந்தேன்“ “இவ்விஷயத்தை நான் அறிந்து கொண்டேன்“ என்று இப்படியே வழக்குகள் எங்கும் காண்கையாலே, விஷயத்தை வாங்கிக்கொள்வதான ஒரு ஞானத்துக்குத் தான் இருப்பிடம் என்னுமிடம் நன்கு தெரிகின்றதன்றோ. இப்படி ஆத்மாவினுடைய அறியும் தன்மை நேராக ஸித்தமாகையாலே கண்ணழிவற்றதென்று கொள்ளக்கடவது. “அஹமிதமபிவேத்மீதி ஆத்ம வித்த்யோர் விபேதே ஸ்புரதி யதி த்தைக்யம் பாஹ்யமப்யேகமஸ்து“ - (நான் வெளியே இருக்கும் வஸ்துவை அறிகிறேன். இந்த ப்ரகாரம் ஆத்மாவுக்கும் ஞானத்துக்கும் விசேஷமான பேதமானது பிரகாசிக்க ஆத்மாவுக்கும் ஞானத்துக்கு ஐக்யமானது எல்லா அனுபவத்துக்கும் விருத்தமாக அங்கீகரிக்கப்பட்டதேயானால் முன் இருக்கையால் இதம் என்று கொள்ளப்பட்ட வெளி வஸ்துவும் ஞானத்தோடு ஐக்யத்தை அடையட்டும் - ஸ்ரீரங்க.2.10) என்கிற பட்டர் ஸ்ரீஸூக்தியும் இங்கு நினைதற்பாலதாகும்.

ஆத்மாவை அறிவுடையவன் என்று தெரிந்து கொண்டபோதே செய்பவன் என்றும் அநுபவிப்பவன் என்றும் தெரிந்து கொள்ளவேணும். இன்னது தள்ளத்தக்கது, இன்னது கொளத்தக்கது என்கிற எண்ணத்துக்கு அறியும் தன்மையானது காரணமாயிருக்கையாலே, தள்ளவேண்டியதை விடுகையிலும் கொள்ள வேண்டியதைப் பற்றுகையிலும் இச்சை உண்டாகி அதன் காரணமாக செய்யும் தன்மை உண்டாகிறது. எவன் ஒரு காரியத்தைச் செய்கிறானோ அவன் அதனால் உண்டாகும் பயனை அனுபவிப்பனுமாகிறான். ஆகவே செய்பவனான போதே அனுபவிப்பவனாகிறான். ஆனபின்பு ஆத்மாவுக்கு அறியும் தன்மை சொன்னது செய்யும் தன்மை அநுபவிக்கும் தன்மைகளும் சொன்னபடியாகக் குறையில்லை.

### செய்யும் தன்மை பிரகிருதிக்கு அன்று ஆத்மாவுக்கே

இப்படி ஆத்மாவுக்கு இயல்பாக இருந்துள்ள செய்யும் தன்மையை ஸாங்க்ய மதத்தவர்கள் பிரகிருதிக்கே உள்ளதாகக் கொள்ளுகின்றார்கள். பகவத் கீதையில் “கார்ய காரண கரீத்ருத்வே ஹேது: ப்ரக்ருதிருச்யதே, புருஷஸ் ஸுகதுக்காநாம் போக்த்ருத்வே ஹேதுருச்யதே“ - தேகம், இந்த்ரியங்களை உண்டுபண்ணுகிற விஷத்தில் மாயையானது காரணமாகச் சொல்லப்படுகிறது. ஜீவன் சுகதுக்கங்களுடைய அநுபவிக்கிற தன்மையில் காரணமாகச் சொல்லப்படுகிறான் - ப.கீ.13.21“ என்று சொல்லுகையாலே “செய்யும் தன்மை உள்ளது பிரகிருதிக்கே, ஆத்மாவுக்கு செய்யும் தன்மையன்றிக்கே அநுபவிக்கும் தன்மையே உள்ளது“ என்று ஸாங்க்யர்கள் நிரூபிக்கிறார்கள். அது தவறு. பிரகிருதிக்கே செய்யும் தன்மையாய்

ஆத்மாவுக்கு அஃதில்லையாகில் ஆத்மாவுக்கு சாஸ்த்ரத்துக்கு வசப்படும் தன்மையும் அநுபவிக்கும் தன்மையும் குலைந்ததாகும். சாஸ்த்ரத்துக்கு வசப்படுகையாவது - விதி நிஷேத ரூபமான சாஸ்த்ரத்துக்குத் தான் அதிகாரியாய்க் கொண்டு அதின் வசத்திலே நடக்க வேண்டுகையாம். இதைச் செய் இதைச் செய்யாதே என்று சாஸ்த்ரங்களானவை பலவற்றை விதித்தும் பலவற்றை மறுத்தும் கூறியிருக்கின்றன. இந்த விதி நிஷேதங்கள் சேதநனைப்பற்றியே அல்லது பிரகிருதியைப் பற்றியல்ல. பிரகிருதிக்கே தான் செய்யும் தன்மை என்னில் சாஸ்த்ரங்களில் காணும் விதி நிஷேதங்கள் பிரகிருதியை நோக்கியவை என்று சொல்லவேணும். ஆகவே சாஸ்த்ரத்துக்கு வசப்படும் தன்மை சேதனனுக்கு குலைந்ததாகும். அன்றியும், விதித்தவற்றைச் செய்து தள்ளவேண்டியதைத்தள்ளி இருக்கிற சேதனன் நல்ல பயன்களை அனுபவிக்கையும், விதித்தவற்றை விட்டு தள்ளவேண்டியதைச் செய்து திரியும் சேதநன் தீய பயன்களை அநுபவிக்கையும் எல்லாருக்கும் நிர்விவாதமாகயிருக்கின்றது. இப்படிப்பட்ட சுகதுக்கமான பயன் அனுபவிக்கும் தன்மையும் சேராமல் போகும். என்ன இன்னும் பல? சேதன்ன் செய்பவனாகாதபோது சாஸ்த்ரமே வீண் என்று சொல்லவேண்டி வரும்.

”ஸ்வர்க்க காமோ யஜேத” - ”ஸ்வர்க்கம் விரும்புமவன் யாகம் செய்ய வேண்டும்” என்றும் ”முமுக்ஷு: ப்ரஹ்ம உபாஸீத” - ”மோக்ஷத்தில் இச்சை யுடையவன் ப்ரஹ்மத்தை உபாஸிக்கவேண்டும்” என்றும் பலபல வகையான விதிகளைக் காண்கிறோம். ஸ்வர்க்கம் மோக்ஷம் முதலான பயன்களை எந்த சேதநன் அனுபவிக்க வேண்டியவனோ அவனையே அன்றோ செய்பவனாக சாஸ்த்ரம் நியோகிக்கிறது. ஆகவே பயனை அனுபவிப்பவனே செய்பவனாக வேணும் என்பது மறுபடியும் சொன்னபடி.அறிவற்ற பொருளுக்கு செய்யும் தன்மையாகில் சேதநனைக் குறித்து விதிக்கவே கூடாது. சாஸநம் பண்ணுவது எதுவோ அதற்கு சாஸ்த்ரம் என்று பெயர். சாஸநமாவது செய்கையிலே இழிவது. சாஸ்த்ரம் செய்கையிலே இழிகையாவது அறிவை உண்டுபண்ணும் வாயிலாகவாகும். அறிவற்ற பிரகிருதிக்கு அறிவை உண்டுபண்ண முடியாதன்றோ. ஆகவே சாஸ்த்ரம் நிறம்பெற வேணுமானால் அநுபவிப்பவனான சேதநனுக்கே செய்யும்தன்மையாக வேணும். இவ்விஷயமெல்லாம் “கர்த்தா சாஸ்த்ரார்த்தவத்வாத்” (2.3.33) (சாஸ்த்ரம் பயனுடையதாகையாலே ஆத்மா செய்பவனாகிறான்) என்கிற ஸூத்ரத்தினாலும் விரிவாகக் கூறப்படுள்ளது.

### செய்யும் தன்மையின் விசேஷ விவரணம்

எல்லா வகையான செய்யும் தன்மையும் சேதநனுக்கு ஸ்வரூபத்தால் உண்டானது என்று நினைக்க வேண்டா. சோறு உண்ணுதல், தண்ணீர் குடித்தல், பெண்களை அநுபவித்தல் முதலிய அநுபவங்களை உத்தேசித்துப் பண்ணும் தன் தொழில்களில் செய்யும் தன்மை காரணத்தோடு கூடியதாகையாலே ஸ்வரூபத்தால் உண்டானதன்று. ஸத்துவம், ரஜஸ், தமஸ்க்களாகிற குணங்களினுடைய சேர்க்கையால் உண்டானது. இந்தப்பொருள் ப்ருக்ருதே: க்ரியமாணாநி குணை: கர்மாணி ஸர்வச, அஹங்கார விமூடாத்மா கர்த்தாஹடுதி மந்யதே" என்கிற கீதா ச்லோகத்தினால் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

ஆக இவ்வளவும் ஸாங்க்யர்களின் பக்ஷத்தை மறுத்து ஆத்மாவுக்கே செய்யும்தன்மை உள்ளதென்று ஸாதிக்கப்பட்டது. இனி இந்த செய்யும் தன்மையானது ஸ்வாதீநமா பராதீநமா என்கிற சந்தேகத்திலே சொல்ல வேண்டிவற்றைச் சொல்லுகிறோம்.

ஆத்மாவின் செய்யும் தன்மை ஈச்வரன் இட்ட வழக்கு

சாஸ்த்ரம் செயல்பட வேண்டியதற்காக செய்யும் தன்மை ஆத்ம தர்மம் என்று கொள்ளவேணும். அந்த செய்யுமவனுக்கு தர்ம்மான ஞானம், இச்சை, முயற்சி ஆகிய இவை பகவானுக்கு இட்டவழக்காயிருக்கையாலும், பகவானுடைய அநுமதி இல்லாமல் அந்த ஞானம் முதலியவை செய்வதற்கு காரணமாக மாட்டாமையாலும் இவனுடைய செய்யும் தன்மை ஈச்வரன் இட்ட வழக்கு என்று கொள்ளவேணும்.

இங்ஙனே கொண்டால் புண்ய பாபங்கள் ஈச்வரனுக்கேயாக வேண்டாவோ? சேதநனுக்கு ஆக இடமில்லையே! என்கிற சந்தேகம் உதிக்க்கூடும். "சேதநனுடைய புத்தி மூலமான முயற்சியை விரும்பி ஈச்வரன் அநுமதிபண்ணுகையாலே அந்த செயலைப்பற்றி வரும் புண்யபாபங்களும் சேதநனுக்கே ஆகின்றன" என்று நம் பூர்வாசாரியர்கள் ஸமாதாநம் அருளிச்செய்கின்றனர். ப்ரஹ்ம ஸூத்ரத்தில் "பராத் து த்த் ச்ருதே" என்கிற ஸூத்ரத்தினால் ஆமாவினுடைய செய்யும் தன்மை பிறர்க்காகும் என்று சொல்லப்பட்டிருப்பதும் "க்ருத ப்ரயத் நாபேக்ஷஸ் து விஹித ப்ரதிஷித்தா வையர்த்த்யாதிப்ய:" என்ற ஸூத்ரத்தினால் சநதேகம் நீக்கப்பட்டிருப்பதும் குறிக்கொள்ளத்தக்கது. விதி நிஷேதங்கள் வீணாகாமைக்காக இந்த சேதநன் பண்ணின முதல் முயற்சியை விரும்பிக் கொண்டு ஈச்வரன் நடக்கும் என்றதாயிற்று.

இதைச் சிறிது விவரிக்கிறோம். எல்லா சேதநர்க்கும் அறியும் தன்மை இயல்பாகையாலே பொதுவாக மூளுகையிலும் மீளுகையிலும் உரிமை தடையற்றிருக்கும். இத்தகைய உரிமையை நிர்வஹிக்கைக்காக ஈச்வரன் அந்தர்யாமியாய்க் கொண்டு நிற்பன். அவனாலே உண்டாக்கப்பட்ட ஸ்வரூப சக்தியையுடையனான சேதநன் அந்தந்த பதார்த்தங்களிலே ஞானம், இச்சை, முயற்சி ஆகியவற்றை உண்டாக்கிக்கொண்டிருப்பன். அவ்விடத்தில் நடுநிலையானாகையாலே அலட்சியம் செய்வாரைப்போலே இருக்கிற பரமாத்மாவானவன் அந்த சேதநனுடைய மூன் பழக்கத்துக்குத்தக்கதான மூளுகை நல்லதோ தீயதோ அதில் அநுமதியையும் அநாதரத்தையுமுடையவனாய்க்கொண்டு, நல்லது சய்யுமளவில் அநுக்ரஹத்தையும், தீயது செய்யுமளவில் நிக்ரஹத்தையும் பண்ணுவானாய் சுகதுக்கங்களை அந்தந்த சேதநர்களுக்கும் கொடுப்பான்.

நடாதூரம்மாள் அருளிச்செய்த தத்வஸாரம் என்னும் க்ரந்தத்தில் - "ஆதாவீச்வரகத்தயைவ........ஹரி:" என்கிற ச்லோகத்தின் பொருள் இவ்விஷயத்தில் நன்கு தெளிவு பிறப்பிக்கும். இதன் பொருள் வருமாறு - ஸர்வ நியாமகனாய் ஸர்வாந்தராத்மாவான ஸர்வேச்வரன் ஆதியிலே தனக்கு உண்டாக்கிக் கொடுத்த அறியும் தன்மை மூலமான சுயேச்சை சக்தியாலே சேதநன் தானே அந்தந்த விஷயங்களிலே ஞானம், இச்சை, முயற்சிகளைப் பண்ணிக் கொண்டிருப்பன். அவ்விடத்தில் சாஸ்த்ரீயமல்லாதவற்றிலே மறுத்தும் சால்தீரியங்களிலே அநுமதி பண்ணியும் அந்தந்த விஷயங்களிலே நிக்ரஹம் அநுக்ரங்களைப்பண்ணிக்கொண்டு அந்தந்த கரும பயன்களையும் ஸர்வேச்வரன் கொடுப்பான் என்கை.

## விசேஷ சந்தேகத்துக்குப் பரிஹாரம்

ஏஷ ஹயேவ ஸாது கர்ம காரயதி தம் யமேப்யோ லோகேப்ய உந்நிநீஷதி, ஏஷ ஏவ ஏஸாது கர்ம காரயதி தம் யமதோ நநீஷதி என்று ஓதப்பட்டிருக்கின்றது. இதன் பொருளாவது, எம்பெருமான் எந்த சேதநனை உயர் கதியை அடைவிக்க விரும்புகிறானோ அவனைக் கொண்டு நல்ல காரியங்களை செய்விக்கிறான். எந்த சேதநனை நீச கதியை அடைவிக்க விரும்புகிறானோ அவனைக் கொண்டு கெட்ட காரியங்களை செய்விக்கிறான் எந்பதாம். ஆகவே நல்ல எண்ணத்தாலும் கெட்ட எண்ணத்தாலும் ஸர்வேச்வரன் தாமே ஸாதுவாயும் அஸாதுவாயுமுள்ள கருமங்களைப் பண்ணுவிக்கும் என்கிற இது எங்ஙனே பொருந்தும் என்ற சந்தேகம் உதிப்பது உண்டு. இதற்குப் பரிஹாரம் ஸ்ரீ பாஷ்யகாரரே நிரூபித்தருளினார். மேல் காட்டின உபநிஷத்தின் விஷயம் எல்லா மக்களுக்கும் பொதுவானதன்று.

யாவனொருவன் பகவத் விஷயத்தில் மிக மிக அதிகமான நன்மையாலே ஒருப்பட்டவனாய்க்கொண்டு இழிகிறானோ, அவனை அநுக்ரஹித்துக் கொண்டு பகவான் தானே தன்னைப் பெறுவதற்கு ஸாதனங்களையும் மிக்க கல்யாணங்களாயுமுள்ள கருமங்களிலே ருசியை உண்டாக்குகிறான் என்றும் யாவனொருவன் மிக மிக நன்மையல்லாத செயலிலே ஒருப்பட்வனாய்க் கொண்டு இழிகிறானோ அவனை தன்னை அடைவதற்கு விரோதிகளாயும் அதோகதி ஸாதனங்களாயுமுள்ள கருமங்களிலே ஊற்றமுடையவனாக்குகிறான் என்றும் அந்த உபநிஷத் வாக்யத்துக்குப் பொருளாம். ஆகவே பொருந்தாமை ஒன்றுமில்லை என்பர்.

ஆன பின்பு சேதன்னுடைய மூளுகையில் எம்பெருமானுக்கு அனுமதி செய்யும் தன்மையே எல்லா மக்களுக்கும் பொது. காரணமாம் தன்மை விசேஷ விஷயம் என்று கொள்ளவேணும்.

ஆத்மாவை ஞானம் என்பதற்குக் காரணம்

ஆத்மா ஞானத்திற்கு இருப்பிடமாயிருக்குமாகில் சாஸ்த்ரங்களில் இவனை ஞானம் என்கிற சொல்லாலேயே சொல்லி இருப்பது ஏன்? ”யோ விஜ்ஞாநே திஷ்டந்” (யாதொரு பரமாத்மாவானவன் ஞான ஸ்வரூபனா ஜீவனிடத்தில் இருந்து கொண்டு - ப்ர.உப) “விஜ்ஞாநம் யஜ்ஞம் தநுதே” (ஜீவன் யஜ்ஞத்தைச் செய்கிறான் - தை.உ.ஆ.4-9) என்பது முதலான ச்ருதிகளில் கேவலம் விஜ்ஞானம் என்றே ஆத்மாவைச் சொல்லியிருக்கிறதே. இது எதனாலே என்னில் - ஜ்ஞானமானது தன்னை பற்றுவதற்கு தானே பிரகாசமாயிருப்பது போலே ஞானத்தை எதிர்பாராமல் தனக்குத்தானே பிரகாசிக்கையாலும், ஞானம் இவனுக்கு ஸாரமான குணமாகையாலே ஸ்வரூபத்தோடு தொடர்ந்துவருவதாய் ஸ்வரூபத்தை நிரூபிக்கும் கரும்மாகையாலே அங்ஙனே சொல்லிற்று. இந்த விஷயம் “தத்குணஸாரத்வாத்து தத்வ்யபதேச: ப்ராஜ்ஞவத்” “யாவதாத்ம பாவித்வாச்ச ந தோஷஸ் த்த்தர்சநாத்” என்கிற இரண்டு ஸூத்ரங்களாலும் சொல்லபட்டுள்ளது. “ஜ்ஞாநமாத்ர வ்யபதேசஸ்து ஜ்ஞாநஸ்ய ப்ரதாந குணத்வாத் ஸ்வரூபாநுபந்திவேந ஸ்வரூப நிரூபக குணத்வாத், ஆத்ம ஸ்வரூபஸ்ய ஜ்ஞாநவத் ஸ்வப்ரகாசத்வாத் வா உப்பத்யதே” என்று வேதாந்த தீபத்தில் ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்த்தும் நினைதற்பாலதாகும்.

ஸ்ரீ காஞ்சி ஸ்வாமி திருவடிகளே சரணம்

**மதுரகவி தாஸன்**

**மாடபூசி வரதராஜன்**

**17.1.2019**